දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍ය / அமைச்சர் / Minister } 2784832, 2784807, 2785617

ලේකම් / செயலாளர் / Secretary } 2784812

කාර්යාලය / அலுவலகம் / Office } 2785141 50, Fax: 2784846

ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

ඔබේ අංකය / உமது இல. / Your No. } ....................................

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

"ඉසුරුපාය"
බත්තරමුල්ල.
"இசுருபாய"
பத்தரமுல்லை.
"Isurupaya"
Battaramulla.

මගේ අංකය / எமது இல. / My No. } ED/01/12/09/05/01

දිනය / திகதி / Date } 2015.01. 25

சுற்று நிருப இல **:05/2015**

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல கோட்ட பொறுப்பு பிரதி/உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல பாடசாலையின் அதிபர்கள்

**<u>பாடசாலைகளில் முறையற்ற வகையில் நிதி சேகரிப்பதைத் தடை செய்தல்.</u>**

01. அரச பாடசாலைகளில் பல்வேறு செயற்பாடுகளை முன்வைத்து மாணவர்களிடமிருந்து / பெற்றோர்களிடமிருந்து நிதி சேகரித்தல் பரவலாக நடைபெறுவதாக கடந்த காலங்களில் அவதானிக்கப்பட்டுள்ளது. அதே போல் அந்நிதி சேகரிப்புச் செயற்பாடு முறைப்படி நடைபெறுகின்றது என்பதை காட்டுவதற்கு பாடசாலை அபிவிருத்தி சங்கம், பழைய மாணவர் சங்கம் என்பவற்றிற்கு மேலதிகமாக தரவட்டங்கள், நலன்புரிச்சங்கள் போன்ற கட்டமைப்புக்களை உருவாக்கி நிதி சேகரிப்பது ஒரு சாதாரண விடயமாக மாறியுள்ளது.

02. தற்போதைய அரசின் கொள்கைகளுக்கு ஏற்ப உடனடியாகச் செயற்படும் வண்ணம் மாணவர்களிடம் அல்லது பெற்றோர்களிடம் இவ்வாறான நிதி சேகரித்தலை முற்றாகத் தடை செய்கின்றேன். இப்பணிப்புரையை மீறி செயற்படும் சந்தர்ப்பங்கள் இருந்தால் அதற்காக அதிபர் நேரடியாக பொறுப்பு கூற வேண்டியதோடு அவ்வாறான நிதி சேகரிப்புக்காக எந்தவொரு நபருக்கும் அங்கீகாரம் வழங்குதலை நேரடியாகவோ மறைமுகமாகவோ செய்தல் கூடாது. ஏதோவொரு வகையில் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் இன்றி இவ்வாறான நிதி சேகரிப்புக்கள் நடைபெற்றால் உரிய நபர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

03. அதேபோல் பாடசாலைகளில் தற்போதுள்ள கட்டிடங்களை பராமரித்தல் தவிர்ந்த வேறு எந்தவொரு கட்டிடத்தையும் நிர்மாணிக்கவோ மாற்றங்களை செய்வதற்கோ ஆரம்பித்தல் கூடாது. பாடசாலைகளின் தரமான கல்விக்காக பாடுபடுவதை விட்டு பௌதீக ரீதியான அபிவிருத்தி (உ+ம்: பாடசாலை சுற்று மதிலுக்காக அதிகளவில் நிதியைச் செலவு செய்தல்) செய்வதற்கு தொடங்கக் கூடாது என்பதோடு பாவனையிலுள்ள கட்டிடங்களையும் வளங்களையும் சரியான முறையில் முகாமைத்துவம் செய்து பாடசாலையை தரமான கல்வியை வழங்கும் ஓர் நிறுவனமாக உருவாக்கிக் கொள்ள அதிபர் மற்றும் ஏனைய அனைத்து பாடசாலை பணியணியினரும் செயற்படுதல் வேண்டும். வகுப்புக்களின் எண்ணிக்கையினை அதிகரிப்பதற்காக புதிய கட்டிடங்களை அமைக்கவோ பாவனையிலுள்ள கட்டிடங்களை பகுதியாக விரிவாக்கவோ கூடாது என்பதும் இப்பணிப்புரையினுள் அடங்குகின்றது.

04. பிரதான பாடசாலைகள் சிலவற்றில் மாத்திரம் பௌதீக அபிவிருத்தியை அதிகரித்து அப்பாடசாலைகளின் மாணவர் எண்ணிக்கையை உயர்த்துவதன் மூலம் அதி உயர்தர மட்டப் பாடசாலைகள் சிலவற்றை நடாத்தி செல்வதன்றி மாணவர் எண்ணிக்கை குறைந்த பாடசாலைகளுக்காகவும் தர ரீதியான செயற்பாடு ஒன்றை ஸ்தாபித்தலே தற்போதைய அரசின் கொள்கையாக அமைகின்றது. எனவே தற்போது மாணவர் கவர்ச்சியுள்ள பாடசாலைகளில் மேலும் மாணவர் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக பௌதீக அபிவிருத்தியை செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

05. பாடசாலை ஒன்றின் அதிபரொருவருக்கு முறையாக சட்டரீதியான பற்றுச்சீட்டொன்றினை வழங்கி நிதி சேகரித்துக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பங்கள் கீழ் வருமாறு.

5.1. அங்கீகாரமளிக்கப்பட்ட வசதிகள் சேவைகள் கட்டணம்

5.2. பாடசாலையின் அத்தியாவசிய செலவுகளை செலுத்துவதற்காக (மின்சாரம், தொலைப்பேசிக்கட்டணம், பாதுகாப்பு செயற்பாடுகள்) போன்ற நிதித் தேவைபாடுகள்

06. இலக்கம் 5.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக நிதி சேகரித்துக் கொள்வதற்கு முன் அனைத்து அதிபர்களும் கீழ்வரும் செயலொழுங்குகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

(அ) பாடசாலையின் அத்தியாவசிய செலவுகளின் மதிப்பீட்டு அறிக்கையொன்றை தயார் செய்தல்

(ஆ) அம் மதிப்பீட்டினை கல்வி அமைச்சின் மூலம் அல்லது வேறு அரசாங்க நிறுவனங்கள் மூலம் கிடைக்கும் நிதிகளை மதிப்பீட்டு (அ) மற்றும் (ஆ) இடையேயான வேறுப்பாட்டினை கணித்தல்.

(இ) இவ்வேறுபாட்டினை பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கையால் பிரித்து ஒரு மாணவருக்குரிய நிதியின் அளவினை கணித்தல்.

(ஈ) மேலுள்ள (அ), (ஆ), (இ) என்பவற்றுக்கு ஏற்ப தயார் செய்யப்பட்ட அறிக்கையை கல்வி அமைச்சுக்கு அனுப்பி ஒரு மாணவனிடமிருந்து பாடசாலையின் செலவினை பூரணப்படுத்தத் தேவையான நிதியினை சேகரிப்பதற்கான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளல்.

07. மேற்கூறப்பட்ட (ஈ) யின் அனுப்பப்படும் அறிக்கை கல்வியமைச்சிற்கு கிடைக்கப்பெற்றதன்பின் குழுவொன்றின் மூலம் ஆராயப்பட்டு தேசிய பாடசாலைகள் தொடர்பில் மத்திய கல்வி அமைச்சின் செயலாளர் மூலம் தனிப்பட்ட ரீதியில் பெற்றுத்தரப்படும். மாகாண பாடசாலை தொடர்பில் மாகாண கல்விச் செயலாளருக்கு இவ்வலுவாண்மை கிடைக்கப் பெறுவதோடு மாகாண கல்விச் செயலாளர் மூலமும் முறையாக குழுவொன்று நியமிக்கப்படல் வேண்டும். மேற்குறிப்பில் குழுவின் மூலம் சேகரிப்பதற்கு சிபார்சு செய்யப்பட்டுள்ள நிதி ஆராயப்பட்டு நியாயமான நிதியொன்றினை தீர்மானித்தல் வேண்டும். இங்கு பாடசாலையின் மாணவர் எண்ணிக்கையையும் குறித்த செயற்பாட்டின் தன்மையையும் பற்றி நன்றாக ஆராய்தல் வேண்டும். மேற்குறிப்பிட்டவாறு கல்விச் செயலாளரின் அங்கிகாரம் கிடைக்கப்பெறும் வரை எவ்வகையிலும் நிதி சேகரிப்பு செய்யக்கூடாது என்பதோடு பாடசாலை நிதி சேகரிப்பின் போது வசதிகள் சேவைகள் கட்டணத்திற்கான கல்வி சீ.100 பற்றுச்சீட்டு தவிர வழங்கக்கூடிய ஒரே பற்றுச்சீட்டு பாடசாலை அபிவிருத்தி சங்க பற்றுச் சீட்டு மாத்திரம் ஆகும். எனினும் நிதி சேகரிக்கும்போது கீழ்வரும் விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்துதல் வேண்டும்.

(i) இந்த சட்டரீதியான கட்டணத்தை செலுத்துவதற்காகவென்றாலும் பெற்றோர் மற்றும் மாணவர்களை கட்டாயப்படுத்தவோ பலவந்தப்படுத்தவோ கூடாது.

(ii) சட்ட ரீதியான கட்டணம் என்றாலும் கூட செலுத்துவதற்கு வசதியற்ற மாணவர்கள், கிராம அலுவலரின் சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தும் போது அனைத்து கட்டணங்களிலிருந்தும் அம்மாணவர்களை விடுவிப்பதோடு அவ்வாறு கட்டணம் செலுத்தலிருந்து விடுவித்திருப்பதாக உரிய பெற்றோருக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

(iii) கட்டணம் செலுத்தாத மாணவர்களை எவ்வித உடல், உள ரீதியான பாதிப்புகளுக்கும் உட்படுத்தல் கூடாது.

08. பழைய மாணவர் சங்கங்கள் மூலம் பாடசாலையினுள்ளோ வெளியிலோ மாணவர்களை பயன்படுத்தி பல்வேறு செயற்றிட்டங்களுக்காக பாடசாலை மாணவர்களிடம் அல்லது பெற்றோர்களிடமிருந்து நிதி மற்றும் பொருட்கள் சேகரித்தல் அல்லது பெற்றுக்கொள்ளல் இதன் பின் தடை செய்யப்படுகின்றது. அத்தோடு பாடசாலைக்கு மாணவர்கள் அனுமதிக்கப்படும் செயற்பாட்டின் போது பழைய மாணவர் சங்கங்கள் ஊடாக எவ்விதத்திலும் நிதியை பெற்றுக்கொள்ளுதல் கூடாது என்பதோடு பழைய மாணவர் சங்கம் பாடசாலையின் அபிவிருத்திக்காக ஏதாவது செயற்பாடுகளை செய்வதற்கு விரும்பினால் பூரணமான அறிக்கை ஒன்றின் மூலம் கல்விச் செயலாளரின் அங்கீகாரத்தினைப் பெற்று வெளிப்படைத்தன்மைக்கு பாதிப்பு ஏற்படா வண்ணம் செயற்படல் வேண்டும். பழைய மாணவர் சங்கங்களின் கணக்கானது கணக்காய்வு செயற்பாடொன்றுக்கு உட்படுத்தப்படாவிடினும் பழைய மாணவர் சங்கங்களினூடாக அல்லது வேறு முறையற்றவகையில் வழிகளினூடாக ஊழல் செய்து நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் செய்யப்பட்டால் அது தொடர்பான அனைத்துத் தரப்பினர்கள் தொடர்பாகவும் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் அல்லது தகவல்கள் மற்றும் கல்வி அமைச்சுக்கு அவ்வாறு செய்ய வேண்டும் என்றும் தோன்றும் சந்தர்ப்பங்களில் தாபனக் கோவை, நிதிப் பிரமாணங்கள் போன்ற கல்வி அமைச்சின் மூலம் வெளியிடப்பட்டுள்ள சுற்று நிருபனங்கள், இலஞ்ச ஆணைக்குழுச் சட்டம் உட்பட உரிய அனைத்து சட்டங்களுக்கு ஏற்ப கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகிறேன்.

09. எனினும் நாட்டின் கல்வி முறைமையை அல்லது ஏதாவதொரு பாடசாலையை அபிவிருத்தி செய்வதற்கு நேர்மையான தேவையுடன் நிதியுதவி அல்லது அன்பளிப்புக்கள் செய்வதற்கு விரும்பும் எந்தவொரு நபருக்கும் அந்நிதியுதவியை அல்லது அன்பளிப்பினை பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு உரிய முறையில் வழங்க முடியும். பொருளொன்றை கல்வி அமைச்சின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டதன் பின் உரிய பற்றுச்சீட்டினை வழங்கி பாடசாலையின் பொருட்பதிவேட்டில் பதித்தல் வேண்டும். எனினும் நபர்கள் மூலமாகவோ நிறுவனங்கள் மூலமாகவோ சுய விருப்புடன் பாடசாலையின் விருத்திக்கு பெற்றுத் தரும் நிதியுதவி அல்லது அன்பளிப்புக்கள் முறைப்படி கணக்காய்வாளர் நாயகத்தின் மேற்பார்வைக்கு உட்படுவதனால் அந்நிதிகளை முறையற்ற முறையில் பயன்படுத்துவதற்குள்ள சந்தர்ப்பங்கள் ஒடுக்கப்படுகின்றது. எனவே நாட்டின் கல்வி முறைமையை முறைப்படி செயற்படுத்திச் செல்வதற்கான பொறிமுறையில் கொடை வள்ளல்களுக்கும் இணைந்து கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் சமமாக கிடைக்கப்பெறுகின்றது. எவ்வாறாயினும் இவ் அனைத்து நிதி உதவிகள், அன்பளிப்புக்கள் பின்பு தனிப்பட்ட உபகாரங்களை பெறும் எதிர்பார்ப்பில் செய்யக்கூடாது என்பதையும் அறியத்தருகிறேன்.

10. இச் சுற்று நிருபனத்தின் விதிமுறைகளைப் பின்பற்றாத சந்தர்ப்பம் ஒன்றில் தாபனக்கோவை, நிதிப்பிரமாணங்கள், கல்வி அமைச்சின் மூலம் வெளியிடப்பட்டுள்ள சுற்று நிருபனங்கள் மற்றும் வழிக்காட்டிகள், கணக்காய்வு சட்டத்திட்டங்களுக்கு ஏற்பவும் ஏனைய உரிய பிரமாணங்களுக்கு ஏற்பவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதையும் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

11. கல்வி அமைச்சினால் பாடசாலை நிதி செயற்பாடுகள் தொடர்பாக விடுவிக்கப்பட்ட சுற்று நிருபங்களில் நிதி வசூலிப்பது தொடர்பான கட்டளைகளை விஞ்சி இந்த சுற்றறிக்கை செல்லுபடி ஆவதோடு, இந்த சுற்று நிருபம் தேசிய பாடசாலைகள் தொடர்பில் மாகாண கல்வி செயலாளருக்கும் இருக்கும் அதிகாரத்தை யாதொரு தனிநபருக்கோ அல்லது நிறுவனத்திற்கோ பரவலாக்கம் செய்யப்படவில்லை என்பதையும் அறியத்தருகிறேன். மாகாண செயலாளரினால் மாகாண பாடசாலைகளுக்காக வழங்கப்படும் அனுமதி தொடர்பாக சுருக்கமான அறிக்கை ஒன்றை மத்திய அமைச்சுக்கு மாதந்தோறும் அனுப்பி வைத்தல் வேண்டும்.

12. தற்போதைக்கு 2015 ஆம் வருடத்தின் யாதுமொரு செயற்பாடுகளுக்காக நிதி அறவிடுவது தொடர்பில் அனுமதியை பெற்றுக்கொண்ட பாடசாலைகள் இருந்தால் அப் பாடசாலைகள் இந்த சுற்று நிருபனத்தின் பிரகாரம் மீண்டும் அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டுமென அறியத்தரப்படுகின்றது.

**உபாலி மாரசிங்க**
செயலாளர்
கல்வி அமைச்சு

பிரதி :- 01.கணக்காளர் நாயகம்
02.பிரதான உள்ளக கணக்காளர், கல்வி அமைச்சு
03.கல்வி அமைச்சின் அனைத்து பதவிநிலை உத்தியோகத்தர்கள்